செய்தி வெளியீடு எண்: 184 நாள் : 04.04.2016

**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற தங்கம், வெள்ளி, டிசர்ட்கள் கைப்பற்றப்பட்டது. இதுவரை ரூ.18.58 கோடி பறிமுதல்</u>**

*************

தேர்தல் நடைமுறைகளையொட்டி, தமிழ்நாட்டில் தேர்தல் விதிகள் தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன. தேர்தல் பறக்கும் படையும், நிலையான கண்காணிப்புக்குழுவும் மாவட்டங்களில் சோதனை செய்து உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற ரொக்கம் மற்றும் பொருட்களை பறிமுதல் செய்து வருகிறார்கள்.

04.04.2016 வரையில் பொது சொத்தில் சுவர் விளம்பரம், போஸ்டர், பேனர் கட்டி சேதம் ஏற்படுத்தியதாக பெறப்பட்ட 2,03,328 புகார்களில் 1,98,280 புகார்கள் சுவர் விளம்பரங்கள் அழிக்கப்பட்டன. தனியார் சுவர்களில் விளம்பரம் செய்ததாக பெறப்பட்ட 80,799 புகார்களில் 72,968 புகார்கள் சுவர் விளம்பரங்கள் அழிக்கப்பட்டன.

01.04.2016 அன்று பறக்கும்படை சோதனையின்போது, சென்னை மாநகரில் ரூ.9.76 லட்சம், விருதுநகரில் ரூ.1.57 லட்சம் என மொத்தம் ரூ.11.93 லட்சமும், 02.04.2016 அன்று நடைபெற்ற சோதனையின்போது, கோவை மாவட்டத்தில் ரூ.5.85 லட்சம், கிருஷ்ணகிரியில் ரூ.4.70 லட்சம், திருநெல்வேலியில் ரூ.5.40 லட்சம், நீலகிரியில் ரூ.1.00 லட்சம், பெரம்பலூரில் ரூ.6.00 லட்சமும் சேலத்தில் ரூ.4.50 லட்சம் உட்பட மொத்தம் ரூ.28.35 லட்சமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 02.04.2016 வரை பறக்கும் படையினரால் மொத்தம் ரூ.8,10,98,910/- பறிமுதல் செய்யப்பட்டுள்ளது

மேலும் நிலையான கண்காணிப்புக்குழு (SST) 01.04.2016 அன்று சோதனை மேற்கொண்டபோது, நாமக்கல் மாவட்டத்தில் ரூ.13.07 லட்சம், சிவகங்கையில் ரூ.2.05 லட்சம், பெரம்பலூரில் ரூ.1.95 லட்சம், நீலகிரி மாவட்டத்தில் ரூ.1.05 லட்சம், சென்னையில் ரூ.8.00 என மொத்தம் ரூ.27.95 லட்சமும், 02.04.2016 அன்று சோதனையை மேற்கொண்டபோது நாமக்கல் மாவட்டத்தில் ரூ.3.00 லட்சம், திருச்சி மாவட்டத்தில் 499.390 கிராம் தங்கம், 167.190 கிராம் வெள்ளி, ஒரு கோல்டு பிளேடட் கைக்கடிகாரம், 1700 டிஷர்ட்கள், தருமபுரியில் ரூ.4.10 லட்சம் என ரூ.7.79 லட்சமும் பறிமுதல் செய்யப்பட்டது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலானதிலிருந்து 02.04.2016 வரை ரூ.10,46,56,880/- ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் விதிகள் மீறி சுவர்களில் கட்சி விளம்பரம் செய்தது, போஸ்டர், பேனர், கட்சி கொடிகளை அகற்றாதது, ஒரு கட்சியினரை வேறு ஒரு கட்சியினர் நாகரீகமற்ற வார்த்தைகளால் பேசி கட்சிகளுக்கும் விரோத மனப்பான்மையை உருவாக்கியது போன்ற காரணங்களால் சேலம், மதுரை மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் அரசியல் கட்சியினர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9